தோற்றம் : 1971 அறிந்தேற்பு : 341/1980

# தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகம்

(Recognized by the Govt. of Tamilnadu G.O.No. 341, Dt.22.03.1980)

TAMILNADU GOVERNMENT COLLEGE TEACHERS' ASSOCIATION

TNGCTA நரசிங்கம் நிலையம், 2, சைடோஜி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005. Ph: 28516573 Telefax: 28414354

## மாநில ஆட்சிக்குழுத் தேர்தல் 2013–2015

**தேர்தல் சுற்றறிக்கை – 1** நாள்: 23.06.2014

தோழர்களே! தோழியரே!

வணக்கம். 22.06.2014 அன்று சென்னையில் நடைபெற்ற மத்திய செயற்குழுவால் நியமிக்கப்பட்ட மாநிலத் தேர்தல் குழு இத்தேர்தல் அறிவிப்பினை வெளியிடுகின்றது.

I. **தேர்தல் அறிவிப்பு நாள்** : 23–06–2014

II **பொறுப்பிற்குரிய காலம்** : 31 மார்ச் 2015 வரை

III.**தேர்தல் நடைபெற உள்ள பொறுப்புகள்:**

(1) தலைவர் (2) துணைத் தலைவர் (பொது) (3) துணைத் தலைவர் (மகளிர்) (4) பொதுச் செயலர் (5) இணைச் செயலர் (பொது) (6) இணைச் செயலர் (மகளிர்) மற்றும் (7) பொருளர்.

IV. **தேர்தல் அட்டவணை:**

| | | |
|---|---|---|
| 1. | வேட்புமனு தாக்கல் துவக்கம் | 25.06.2014 புதன்கிழமை |
| 2. | வேட்புமனு தாக்கல் – இறுதி நாள் | 28.06.2014 சனிக்கிழமை மாலை 5.00 மணி |
| 3. | தகுதியுடைய வேட்பாளர் பட்டியல் | 28.06.2014 சனிக்கிழமை மாலை 6.00 மணி |
| 4. | வேட்புமனுவைத் திரும்பப் பெறல் | 30.06.2014 திங்கட்கிழமை மாலை 3.00 மணி வரை |
| 5. | இறுதி வேட்பாளர் பட்டியல் | 30.06.2014 திங்கட்கிழமை மாலை 4.00 மணி |

IV. **வாக்குப் பதிவு**

| | |
|---|---|
| வாக்குப்பதிவு நடைபெறுமிடம் | ஜமால் முகமது கல்லூரி, திருச்சி |
| வாக்குப் பதிவு நாள் | 13.07.2014 ஞாயிற்றுக்கிழமை |
| வாக்குப் பதிவு நேரம் | காலை 9.30 மணி முதல் – 2.30 மணி வரை |
| வாக்கு எண்ணிக்கை | பிற்பகல் 3.00 மணி |
| தேர்தல் முடிவுகள் அறிவிப்பு | வாக்கு எண்ணிக்கை முடிந்தவுடன் |
| புதிய ஆட்சிக்குழு பொறுப்பேற்பு | தேர்தல் முடிவுகள் அறிவிப்புக்குப் பின்னர் மாலை 4.15 மணி |

V **வேட்பு மனுக் கட்டணம்** : ரூ. 500/– (ரூபாய் ஐநூறு மட்டும்)

ஒவ்வொரு வேட்புமனுவுடனும் ரூ. 500/–க்கு வங்கி வரைவோலை (Demand Draft.) TNGCTA. என்ற பெயரில் Payable at Chennai என்று குறிப்பிட்டு இணைத்து அனுப்பிடல் வேண்டும். தலைமையகத்தில் 2014 ஜூன் 27 மற்றும் 28 தேதிகளில் நேரில் (பணம்/வரைவோலை) செலுத்தி வேட்புமனுவைத் தாக்கல் செய்யலாம். வேட்பு மனுக் கட்டணம் திருப்பித் தரப்பட மாட்டாது.

வேட்புமனு படிவம், வங்கி வரைவோலை (D.D.) ஆகியவற்றை அனுப்ப வேண்டிய முகவரி:

**பேரா. ந. செல்வராஜ்,**
**தேர்தல் குழு அமைப்பாளர் – TNGCTA**
**பேராசிரியர் நரசிங்கம் நிலையம்,**
**எண். 2 சைடோஜி தெரு, திருவல்லிக்கேணி,**
**சென்னை – 600 005.**

2014 ஜூன் 27 மற்றும் 28 ஆகிய கடைசி இரு தினங்களிலும் பிற்பகல் 2.30 மணி முதல் தேர்தல் குழு, தலைமையகத்தில் இருந்து, வேட்புமனுக்களைப் பெற்றுக் கொள்ளும் பதிவு அஞ்சல் அல்லது கூரியர் தபால் மூலம் வேட்புமனுவினை அனுப்பிடலாம். ஆயினும் அஞ்சலக/கூரியர் தாமதத்திற்குத் தேர்தல் குழு பொறுப்பேற்காது. நன்கு முத்திரையிடப்பட்ட தடிமமான உறையினுள் வேட்புமனுப் படிவம், வங்கி வரைவோலை ஆகியவற்றை வைத்து உறையின் மேல், இடதுபுறத்தில் தடித்த எழுதுக்களில் **"மாநில ஆட்சிக் குழுத் தேர்தல் 2013–2015"** என்று எழுதப்படல் வேண்டும்.

VII. **வேட்புமனு பரிசீலனை:**

தகுதியுள்ள வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும் நாளான 28.06.2014 சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு வேட்பாளர்கள் அல்லது அவர்களது முகவர்கள் மற்றும் வருகைபுரிந்துள்ள உறுப்பினர்கள் முன்னிலையில் (சென்னைத் தலைமையகத்தில்) உறைகள் பிரிக்கப்பட்டு பரிசீலனை மேற்கொள் ளப்பட்டு, தகுதியுடையோர் பட்டியல் வெளியிடப்படும். வேட்பு மனுவினைத் திரும்பப்பெற, தேர்தல்குழு அமைப்பாளருக்கு வேட்பாளர் உரிய வகையில்

எழுதிக் கையொப்பமிட்டு, குறித்த நேரத்திற்குள்ளாக மனுவினை அளித்திடல் வேண்டும்.

**<u>தேர்தல் விதிமுறைகள்:</u>**

1. தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகத்தின் அமைப்பு விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிகளின்படி தேர்தல் நடைபெறும்.
2. வேட்பாளர் தகுதி:
   அமைப்பு விதி 47 பிரிவு 1, 5, 8 மற்றும் 9 ஆகியவற்றில் தெரிவிக்கப்பட்டுள்ள அனைத்துத் தகுதிகளையும் உடைய உறுப்பினராக இருத்தல் வேண்டும். வேட்புமனுப் படிவத்தில் கிளைப் பொறுப்பாளர்கள் இதற்கான சான்றளித்திருத்தல் வேண்டும்.
3. வேட்புமனு, மாநிலத் தேர்தலுக்கான வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ள ஒருவரால் முன்மொழியப்பட்டு, இப்பட்டியலில் உள்ள மற்றொருவரால் வழிமொழியப்பட்டிருத்தல் வேண்டும்.
4. ஒரு பொறுப்பிற்கு முன்மொழிபவர் / வழிமொழிபவர் அதே பொறுப்பிற்கு மற்றொருவருக்கு முன்மொழியவோ / வழிமொழியவோ கூடாது. அவ்வாறு முன்மொழிய/ வழிமொழியப்பட்டுள்ள வேட்பு மனுக்கள் அனைத்துமே தகுதியற்றவையாகக் கருத்தப்பட்டு, நிராகரிக்கப்படும்.
5. வாக்காளர்களால் முன்மொழிய/வழிமொழியப்படாத, கிளைச் சான்றிதழ் பெறப்படாத மற்றும் வேட்புமனுக் கட்டணம் செலுத்தப்படாத வேட்புமனுக்கள் நிராகரிக்கப்படும்.
6. வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றுள்ள உறுப்பினர்கள் மட்டுமே மாநிலத் தேர்தலில் வாக்களிக்க முடியும். அவருக்கு மாற்றாக வேறொருவர் வாக்களிக்க அனுமதிக்கப்படமாட்டார். ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளில் (கிளை/மண்டலப் பதவி) ஒருவர் இருப்பின் ஏதாவது ஒரு பதவி வழியின் பொருட்டே வாக்களிக்க முடியும்.
7. கிளை வாக்காளர்கள், கிளைச் செயலராலும், மண்டல வாக்காளர்கள் மண்டலச் செயலராலும் சான்றொப்பம் இட்ட அடையாளச் சீட்டினை வாக்களிக்க வரும்போது கட்டாயமாகக் கொண்டு வருதல் வேண்டும். அடையாள சீட்டு இல்லாவிட்டால் வாக்களிக்க முடியாது.
8. அஞ்சல்முறை வாக்களிப்புக் கிடையாது. வாக்களிப்போர் நேரில் வந்து வாக்களித்தல் வேண்டும்.

இந்த அறிக்கையுடன் 2013–2015ம் காலத்திற்குரிய மாநிலத் தேர்தலுக்கான வேட்புமனு மாதிரிப் படிவம் மற்றும் வாக்காளர் அடையாள சான்றிதழ் ஆகியவை அனுப்பப்படுகிறது. இறுதி வாக்களர் பட்டியல் கழக இணையதளத்தில் (tngcta.org) வெளியிடப்படும்.

கிளைச் செயலர்கள், இச்சுற்றறிக்கையினை அனைத்து உறுப்பினர்களுக்கும் சுற்றுக்கு அனுப்பி உறுப்பினர்கள் பார்த்தமைக்கான ஒப்புகையினைப் பெற்று வைத்துக் கொள்ளல் வேண்டும். இத்தேர்தலை நன்முறையில் நடத்திட அனைவரது ஒத்துழைப்பினையும் அன்புடன் வேண்டுகிறோம்.

இவண்,
மாநிலத் தேர்தல் குழு,


பேரா. அ. ஜோசப் துரை
உறுப்பினர்
மாநிலக் கல்லூரி,
சென்னை – 600 005.

பேரா. ந. செல்வராஜ்,
அமைப்பாளர்
அரசு கலைக் கல்லூரி,
குளித்தலை..

பேரா. கு. நடராஜன்
உறுப்பினர்,
அரசு கலைக் கல்லூரி,
நாமக்கல்.